(2020) 9 எஸ்.சி.ஆர். 494

கருலால் மற்றும் பலர்

–எதிர்–

மத்தியப் பிரதேச மாநில அரசு

குற்றவியல் மேல்முறையீடு எண் 316/2011

அக்டோபர் 09, 2020

(மாண்புமிகு நீதியரசர் திரு. என்.வி. ரமணா,

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்ய காந்த் மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ரிஷிகேஷ் ராய்)

தண்டனை சட்டம் 1860 :

பிரிவுகள் 148 302/149 இன் கீழ் – வழக்கு தொடரப்பட்டது– 3 கண்ணுற்ற சாட்சிகள் – கீழமை நீதிமன்றங்களின் தண்டனைத் தீர்ப்பு – உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு – முடிவு: அரசுத் தரப்பின் கூற்று நம்பத்தக்கது, மேலும் மூன்று கண்ணுற்ற சாட்சிகளுடன் ஒத்துப்போகிறது, அது மருத்துவ சாட்சியத்துடன் உறுதியூட்டப்பட்டன – இரண்டு கண்ணுற்ற சாட்சிகள் தொடர்புடையவர்கள் என்றும், சில சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளனர் என்ற சங்கதிகள், அரசுத்தரப்பு வழக்கை பாதிக்காது.

சாட்சியம் :

தொடர்புடைய சாட்சி – சாட்சிய மதிப்பு – முடிவு தொடர்புடைய சாட்சியின் சான்றுரை, உண்மையானதாக காணப்பட்டால், அது குற்ற தீர்ப்பிற்கு அடிப்படையாக விளங்கும்.

குற்றவியல் வழக்கு விசாரணை :

பொய்யாக சிக்கவைக்கப்பட்டார் என்ற வாதம் – முன் விரோதத்தின் காரணமாக – முடிவு, வாதுரை நிலைக்கத்தக்கதல்ல –

சாட்சிகள் நம்பத்தகுந்தவர்களாக இருந்தால், முன்விரோதம் தாமே எந்த சாட்சியத்திற்கும் கலங்கம் ஏற்படுத்தாது.

மேல்முறையீட்டை தள்ளுபடி செய்த நீதிமன்றம்.

முடிவு : 1 அ.சா.11 தொடர்புடைய சாட்சி அல்ல. அவரது சான்றுரை அனைத்து பொருள் விவரங்களிலும் அ.சா.3 மற்றும் அ.சா.12 ஆகியோரின் சான்றுகளுடன் கணிசமாக ஒத்துப்போகிறது. அவர்கள் இறந்தவருடன் தொடர்புடையவர்கள் என்பதால், குற்றமற்ற நபர்களை பொய்யாகக் சிக்கவைப்பார்கள் என்று பொருள்படாது. தொடர்புடைய சாட்சியின் சாட்சியம், உண்மையெனக் கண்டறியப்பட்டால், அதுவே தண்டனைக்கு அடிப்படையாக அமையலாம் என்பது மிகத் தெளிவாகிறது என்பதும், அ.சா.3 மற்றும் அ.சா.12 ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்தனர் என்பதும், எதிரிகள் பல கொடிய ஆயுதங்களை கையில் ஏந்தி இருந்தனர் என்பதையும் நாங்கள் நம்புவதற்கு எல்லா காரணங்களும் உள்ளன. (பத்திகள் 19 மற்றும் 20) (501– ஈ. உ., 502–ஆ–இ)

தலீப்சிங் மற்றும் பலர் எதிர் பஞ்சாப் மாநிலம் ஏ.ஐ.ஆர் 1953 எஸ்.சி.364 (1954) எஸ்.சி.ஆர்.145, உத்திரபிரதேச மாநிலம் எதிர் சாமண்தாஸ், (1972) 3 எஸ்.சி.சி.201 : (1972) 3 எஸ்.சி.ஆர்.58, குர்ஷித் அகமத் எதிர் ஜம்மு மற்றும் கேஷ்மீர் மாநிலம் (2018) 7 எஸ்.சி.சி. 429: (2018) 6 எஸ்.சி.ஆர்.1121.

2. மற்றபடி சாட்சிகள் நம்பகமானவர்களாக இருந்தால், கடந்த கால பகை தாமே எந்த சாட்சியத்தையும், நிராகரிக்காது. உண்மையில் பகைமை இரத்த உறவுமுறை குற்றத்திற்கான தெளிவான நோக்கத்திற்கு வழிவகுக்கும். எனவே, இந்த அம்சம், தற்போதைய

வழக்கில் எதிர்தரப்புக்கு உதவும் என்று நாங்கள் கருதவில்லை. (பத்தி 22) (502 ஜி)

சுஷில் மற்றும் பலர் எதிர் உத்திரபிரதேச மாநிலம் (1995) 1 சப்பில் எஸ்.சி.சி.363: (1994) 5 சப்பில்..எஸ்.சி.ஆர்.294– சார்ந்துள்ளது.

3. எதிரிக்கு எதிரான வழக்கை தெளிவாக ஆதரிக்க முக்கிய சான்றாதாரங்களும், நம்பகமான சாட்சியங்களும் உள்ளதால், இந்த விடையம், தொடர்பாக அரசுத் தரப்பு தோல்வியுற வேண்டியதில்லை. சில சாட்சிகள் தங்களது சொந்த காரணங்களுக்காக அரசுத் தரப்பு வாதத்திற்கு ஆதரவளிக்கவில்லை, அத்தகைய சூழ்நிலையில், மற்ற கிடைக்கக்கூடிய சான்றுகள் குற்றச்சாட்டை முழுமையாக நிரூபிக்குமா என்பதை தீர்மானிப்பது நீதிமன்றத்திற்கு அவசியமாகிறது. இந்த வழக்கில் அரசுத் தரப்புக் கூற்று நம்பகத்தன்மையுடையது என்றும், சம்பவம் குறித்து ஒரே மாதிரியான விவரங்கள் அளித்துள்ள மூன்று கண்ணுற்ற சாட்சியால் அது ஆதரிக்கப்படுகிறது என்றும் காணப்படுகிறது. அவர்களது சான்றுரை மருத்துவ சாட்சியத்தின் மூலம் உறுதியூட்டப்படுகிறது. கற்றறிந்த விசாரணை நீதிபதி இருதரப்பு சாட்சியங்களையும் விரிவாக பரிசீலித்து, நம்பிக்கையளிக்கும் ஒரு தர்க்கரீதியான முடிவுக்கு வந்துள்ளார். எனவே, பிறழ் சாட்சிகள் மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பை பாதிக்க மாட்டார்கள் என்பது எங்களது கருத்தாகம். மேல்முறையீட்டளார்களின் தண்டனைத் தீர்ப்பு முறையே உத்தரவிடப்பட்டு, அது உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டது சரியே.

<u>வழக்கு சட்ட குறிப்பு</u>

(1954)எஸ்.சி.ஆர் 145 சார்ந்துள்ளது பத்தி 18

(1992) 3 எஸ்.சி.ஆர்.58	சார்ந்துள்ளது	பத்தி 19
(2019) 6 எஸ்.சி.ஆர்.1121	சார்ந்துள்ளது	பத்தி 20
(1994) 5 சப்பில் எஸ்.சி.ஆர்.294	சார்ந்துள்ளது	பத்தி 21

குற்றவியல் மேல்முறையீடு அதிகார வரம்பு : –

குற்றவியல் மேல்முறையீட்டு எண்.316/2011

இன்டோரிலுள்ள மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் மேல்முறையீட்டு எண்.1637/1999–இல் 23.06.2009 ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்திரவிலிருந்து எழுகிறது.

அன்கிட்டா சௌத்ரி, துணை கணக்காய்வு தலைவர், மஜிபால், அர்ஜுன் கார்க், திருமதி.சுரூத்திகாகார்க், தரப்பினர்களக்காக முன்னிலையான வழக்குரைஞர்கள்

நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. ரிஷிகேஸ் ராய் அவர்களால் பகரப்பட்டது :–

1. இம்மேல்முறையீடுகள் 5 எதிரிகளான அதாவது, காரூலால் (எ–5), ஆம்ரா (எ–6), காச்ரூ (எ.7), சூராட்ரம் (எ.8) மற்றும் பாகிரத் (எ.9) ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டது. அவர்கள் குற்றவியல் மேல்முறையீடு எண் 1637/1999–இல், 23.06.2009 ஆம் தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்திரவினை எதிர்த்தனர், அதில், இன்டோரிலுள்ள மத்திய பிரதேச உயர்நீதிமன்றத் தீர்ப்பாயம், 1860, இந்திய தண்டனைச் சட்டம் (சுருக்கமாக "இ.த.ச.") பிரிவு 148, 302 உடன் இணைந்த பிரிவு 149–இன் கீழ் மேல்முறையீட்டாளர்களின் தண்டனைத் தீர்ப்பும், அதன் விளைவாக மந்தசோர், 2–ஆம் கூடுதல் அமர்வு நீதிபதியின் (இதில் இதற்கு பிறகு "கற்றறிந்த விசாரணை நீதிமன்றம்" என குறிப்பிடப்படும்) குற்றத் திர்ப்பும் உறுதி செய்யப்பட்டது.

2. அரசுத் தரப்பு வழக்கு யாதெனில், காலை சுமார் 8–8.30 மணியளவில், இறந்தவரான மாதவ்ஜி 18.8.1993 ஆம் தேதியன்று தனது வயலில் இருநத்தாகவும், அருகில் அவரது மகன் பவர்லால் (அ.சா.3) கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருந்தார் என்பதாகும். திடீரெ பவர்லால் தனது தந்தை கதறியதையும், அம்ரா, கச்ரூ, கரூ, சுர்தராம், லாலு (தற்போது இறந்தவர்) மற்றும் பாகிரத் அவரது தந்தையை கோடாரி, வாள், வளரி, குறுந்தடி போன்ற ஆயுதங்களை கொண்டு தாக்குவதையும் கண்டார். சரசலப்பை கேட்டு, இறந்தவரின் மகனான ஷியாம்பாய் (அ.சா.13) கனிராமின் மகனான பவர்லால் (அ.சா.9) மற்றும் பாபுலால் (அ.சா.12) ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். அவர்களை கண்டதும், எதிரி தப்பி ஓடிவிட்டார். பின்னர் பவர்லால் ஒரு மாட்டு வண்டியை ஏற்பாடு செய்து காயமுற்ற தனது தந்தையை நாராயண்கருக்கு கொண்டு சென்றார். அவர்கள் எதிரிகளின் வீடுகளை கடக்கும்போது பாதம்பாய், முன்னாபாய், ரமிபாய், சீட்தாபாய், மற்றும் கச்ரூவின் மகன் வேனிராம் ஆகியோர், வண்டியை தடுத்து நிறுத்தி, அ.சா.3 ஐ புகார் தாக்கல் செய்தால் அவரை கொலை செய்வதாக அச்சுறுத்தினார். மற்ற நபர்கள் சூழ்ந்துகொண்டதன் காரணமாக வண்டி நாராயண்கரை நோக்கி நகர்ந்தது. கொண்டு செல்லும் வழியில் மாதவ்ஜி இறந்துவிட்டார். பவர்லால் மற்றும் பாபுலால், சடலத்துடன் நாராயண்கர் காவல் நிலையத்தை அடைந்து சம்பவம் நடந்து நான்கு மணி நேரத்துக்குள், காலை சுமார் 11.55 மணிக்கு புகார் தாக்கல் செய்தனர். சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடையேயான தூரம் சுமார் 8 கி.மீ. ஆகும்.

3. புலன்விசாரணை முடிந்ததன்பேரில், இத.ச.பிரிவுகள் 148, 302 உ/இ 149 ன் கீழ் ஆறு எதிரிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அவர்கள் காயமுற்றவரை மாட்டு வண்டியில் கொண்டு

சென்றபோது மற்ற நான்கு நபர்களான அதாவது பாதம்பாய், முன்னாபாய், ரமிபாய் மற்றும் சீதாபாய் ஆகியோர் தடுத்து மிரட்டியதால், அவர்கள் இ.த.ச. பிரிவு 506–ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

4. இ.த.ச. பிரிவு 506 ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 4 பெண்களுக்கு எதிரான சாட்சியங்களை மதிப்பீடு செய்ததன்பேரில், விசாரணை நீதிபதி தகவல் தருபவரை தடுத்து, கொலை மிரட்டல் விடுத்து நிரூபிக்கப்படாததால், அவர்களை விடுதலை செய்யும்படி உத்தரவிடப்பட்டது.

5. பிறகு, இ.த.ச. பிரிவு 148, 302 உ/இ 149 ஆகியவற்றின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள எதிரிக்கு எதிரான சாட்சியங்கள் கருத்திற் கொள்ளப்பட்டது. அரசு தரப்பு அதன் வழக்கை நிரூபிக்க 15 சாட்சிகளை விசாரித்தது, அதில் அ.சா.1 எதிரியின் கைதைப் பற்றி சாட்சியம் அளித்தார். மற்ற நான்கு நபர்களான அதாவது கிஷான்லால் (அ.சா.6) பிரபுலால் (அ.சா.7), கனிராமின் மகன் பவர்லால் (அ.சா.9) மற்றும் நானுராம் (அ.சா.13) பிறழ்சாட்சிகளாக மாறி, அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்கவில்லை. இறந்தவரின் உடலில் பிரே பரிசோனை செய்த மருத்துவர் பி.என் ஸ்ரீவஸ்தவ் (அ.சா.2), அவரது உடலில் பின்வரும் 9 காயங்களை குறிப்பிட்டார் : –

1) கூர்மையான ஆயுதத்தால் இடதுபுற தலையில் 4” x 2” x ½” உள்ள வெட்டப்பட்ட காயம்.
2) வளதுபுற தொடை எலும்பில் பல்வேறு விதமான எலும்பு மிறிவு மற்றும் அதை சுற்றிலும் வீக்கம், இது குறிப்பிட்ட மழுங்கிய கடினமான பொருளால் விளைவிக்கப்பட்டதாக தெரிகிறது.
3) வளது ரேடியோல்னா எலும்பில் மழுங்கிய கடினமான ஏதே ஒரு பொருளால் ஏற்பட்ட கூட்டு எலும்பு முறிவு.

4) இடது தொடை எலும்பில் ஒரு கடினமான மழுங்கிய பொருளால் ஏற்படுத்தப்பட்ட எலும்பு முறிவு.

5) உலர்ந்த இரத்த வெட்டுடனானஇடது மூச்சுகுழாய் எலும்பு 2" x1" x ½" அளவில் இடக்கையில் மேற்புறமாக கூர்மையான ஆயுத்த்தால் ஏற்படுத்தப்பட்ட வெட்டு காயம் உலர்ந்த இரத்தக் காயத்துடன் இருந்தது .

6) கடினமான மழுங்கிய பொருளால் விளைவிக்கப்பட்ட உலர்ந்த இரத்ததோடு இடது முழங்கை கூட்டு முறிவு.

7) ஏதோ ஒரு கடினமான மழுங்கிய பொருளால் ஏற்படுத்தப்பட்ட வெட்டு நரம்புகள் உலர்ந்த இரத்துடன் உடன் 2" x 2" x 1" அளவில் வலது கணுக்காலில் வெட்டு காயம்.

8) ஏதோ ஒரு கடினமான மழுங்கிய பொருளால் விளைவிக்கப்பட்ட வலது கீழ்கால் உள்ளெலும்பு மற்றம் வெளியெலும்பு கூட்டு முறிவு.

9) ஏதோ ஒரு கடினமான மற்றும் வெட்டும் பொருளால் ஏற்படுத்தப்பட்ட உலர்ந்த இரத்தத்தோடு வெட்டுப்பட்ட தொடையிலுள்ள இரத்தக் குழாய் மற்றும் 2" x 2" 1/2" அளவிலான இடது தொடையில் வெட்டு காயம் மற்றும் வெட்டப்பட்ட நரம்புகள்.

6. மருத்துவரின் கருத்துப்படி, அதிர்ச்சியினாலும் கூர்மையான மற்றும் மழுங்கிய கடினமான ஆயுதங்களால் விளைவிக்கப்பட்ட காயங்களினாலும், இரத்த கசிவு ஏற்பட்டு மரணம் விளைந்தது. அவர் குறுக்கு விசாரணையில் கூறியதாவது :

அ) " மாதவின் உடலில் ஏற்பட்ட பலவகையான காயங்களின் ஒட்டுமொத்த விளைவாக அவருக்கு மரணம் ஏற்பட்டது. கால்

முன்னெலும்பு, முழங்கால் எலும்பு, முழங்கை எலும்பு, முன்கை எலும்பு, மேல்கையில் நீண்ட எலும்புகளில் ஏற்பட்ட காயங்கள் மிகவும் தீவிரமாக இல்லையெனில் அது மரணத்தை ஏற்படுத்தாது. எண்.1 ல் பட்டியலிடப்பட்ட காயங்களில் பட்டியலில் எலும்பு முறிவு இல்லை. ஒருவர் ஆழ்பள்ள நீரோடையில் விழுந்து பாறைகளின் அடியில் அல்லது அவர் கைகள், கால் பாறையில் தொடும்போது கால் முன்னெலும்பு, முழங்கால் எலும்பு, முழங்கை எலும்பு, முன்கை எலும்பு, மேல்கையின் நீண்ட எலும்பு ஆகியவற்றில் முறிவு ஏற்பட வாய்ப்புள்ளது."

7. சம்பவத்தை நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சிகள் பவர்லால் (அ.சா.3), பாபுலால (அ.சா.11) மற்றும் சியாம்கலாபாய் (அ.சா.12) ஆவர். இறந்தவரின் மகனான பன்வர்லால், அவரது சாட்சியத்தில் 18.08.1993 அன்று காலை அருகில் இருநத் வயல்வெளியில் தன் எருதுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது மாதவ்ஜியின் வேத அழுகையை கேட்டதாகவும், அவரது தந்தையை நோக்கி ஓடியபோது, அ.சா.3, லாலா, காரூ, ஆம்ரா, கச்ரூ, சூரட்ராம் மற்றும் பாகிரத் ஆகியோர் அவரது தந்தையை தாக்கி கொண்டிருந்ததை கண்டதாகவும் கூறினார். அவரது அக்கா சியாம்கலா (அ.சா.12)ம் வயல்வெளியை அடைந்தார். அ.சா.3 ன்படி லாலா மற்றும் ஆம்ரா குறுந்தாடி ஏந்தியதாகவும், சூரட்ராம் கத்தியை வைத்திருந்த்தாகவும், கச்ரூ, வாள் வைத்திருந்ததாகவும், கரூஜி, குந்தாலி போன்ற விளிம்பு கொண்ட கோடாரி மற்றும் பகிரத்தும் கோடாரி ஒன்றை வைத்திருந்ததாகவும் கூறினார். மகன் வீட்டிற்கு விரைந்து மாட்டு வண்டியை ஏற்பாடு செய்து காயமடைந்த மாதவ்ஜியை அதில் வைத்து நாராயண்கர் காவல்நிலையத்திற்கு விரைந்து அங்கு முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தான். லாலா, ஆம்ரூ, கச்ரூ, சூரட்ராம் மற்றும் பாகிரத்

ஆகியோர் தாக்கப்பட்டதாக காயமடைந்த மாதவ்ஜி தன்னிடம் வயல்வெளியில் இருந்தபோதே மாட்டு வண்டியை எடுக்க சொல்லும் முன்பே கூறியதாக அ.சா.3 குறிப்பிட்டுள்ளார்.

8. இறந்தவரின் மகன் சியாம் கலாபாய் (அ.ச.12) வயல்வெளியை நோக்கி சென்று கொண்டிருந்தபோது, தன் தந்தை உதவி கேட்டு அலறியதாகவும், லாலாஜியின் மகன்கள், தன்னை தாக்குவதாகவும் கூச்சலிட்டதாகவும் கூறினார். சம்பவ இடத்திற்கு விரைந்தபோது, தனது சகோதரன் பன்வர்லால் (அ.சா.3) மற்றும் பாபுலால் (அ.சா.11) சம்பவ இடத்திற்கு விரைவதை கண்டார். தனது தந்தை காயம் அடைந்த நிலையில் இருப்பதையும், எதிரிகள் தங்கள் கையில் பலவகை ஆயுதங்களுடன் ஓடுவதையும் கண்டார். மாட்டு வண்டியில் காயம்பட்ட் தந்தையுடன் தன் சகோதரனும் சென்றதாகவும் நாராயண்கர் செல்லும் வழியில் மாதவ்ஜி இறந்ததாகவும் தெரிவித்தார்.

9. சம்பவ தினத்தன்று, பாபுலால் (அ.சா.11) இறந்தவரின் வீட்டில் இரவு தங்கிவிட்டு தனது கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தார். மாதவ்ஜி அவருடன் காலையில் தேநீர் அருந்திவிட்டு தன் வயல்வெளியை நோக்கி சென்றார். சிறிது தூரம் சென்ற பிறகு, தன்னை கொலை செய்கிறார்கள் என மாதவ்ஜி கதறியதை சாட்சி கேட்டார். அ.சா.11 வயல்வெளிக்கு விரைந்த போது, எதிரி கொடிய ஆயுதங்களால் மாதவ்ஜியை தாக்குவதை கவனித்தார். கைகள், பாதங்களில் ஏற்பட்ட காயங்களைத் தவிர கோடாரியை கொண்டு தாக்கியதால் மாதவ்ஜியின் தலையில் ஏற்பட்ட காயத்தால் அவர் அவதியுற்றதாக கூறினார். மகன் (அ.சா.3) ஓட்டிய மாட்டுவண்டியில் சாட்சி காயமடைந்தவரை வைத்தார். சாட்சி நடந்தே

மாட்டு வண்டியை பின் தொடர்ந்தார். நாராயண்கர் நோக்கி செல்லும்போதே மாதவ்ஜி இறந்துவிட்டார்.

10. சாட்சியங்களை மதிப்பிடுகையில், அறிவார்ந்த விசாரணை நீதிமன்றம், இறந்த மாதவ்ஜியை தாக்குவதற்காக ஆறு எதிரிகள் (இறந்த லாலாவும் சேர்த்து), கொடிய ஆயுதங்கள் ஏந்தி சட்டவிரோதமாக கூடியதாக கண்டறிந்தது. கண்ணுற்ற சாட்சிகளான அ.சா. 3 மற்றும் அ.சா.12 ஐ (இறந்தவரின் பிள்ளைகள்) குறிப்பிடுகையில், தொடர்பில்லாத 3 வது கண்ணுற்ற சாட்சியான அ.சா.11 ஐ நீதிமன்றம் முன்னிலைப்படுத்தியது. அ.சா.3–இன் சாட்சியத்தில் சிறிய முரண்பாடு இருப்பதை குறிப்பிட்ட விசாரணை நீதிமன்றம், முதல்விசாரணை மற்றும் குறுக்கு விசாரணைக்கும் இடையே நீண்ட இடைவெளியான ஒன்றரை ஆண்டு இருந்ததை கண்டறிந்தது. இருப்பினும், கண்ணுற்ற சாட்சியாக இருக்கும் அவரது சான்றுரை மற்ற இரண்டு கண்ணுற்ற சாட்சிகளின் சான்றுரையோடு ஒத்துப்போவது கண்டறியப்பட்டது.

11. அதேபோன், அ.சா.3 மற்றும் அ.சா.11 (கண்ணுற்ற சாட்சிகள்) சியாம்கலாபாய் (அ.சா.12) தாக்கப்பட்ட சம்பவ இடத்தில் இருந்தார் என்பதை உறுதி செய்து இருப்பதால், அனைத்து சான்று பொருட்களிலுடனும் அவை ஒன்றொடொன்று உறுதி செய்யப்பட்டிருப்பதால் அவரது சாட்சியம் நம்பகமானதாக அறிவார்ந்த விசாரணை நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

12. மாதவ்ஜி நீரோடையில் தவறி விழுந்ததால்தான் காயமுற்றார் என்று குறிப்பிட்ட ராம்சிங் (எ.சா.1) மற்றும் மங்கிலால் (எ.சா.2) ஆகியோரின் எதிர்தரப்பு கூற்றை குறித்து ஆராய்ந்ததன்பேரில், கிராம

காவலாளியின் சாதாரண கடமையான மாதவ்ஜியின் குறிப்பிட்ட விபத்தை குறித்து காவல்துறையிடம் அறிக்கை செய்யாமல், சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிடாமல் இருந்த எ.சா.2, கிராம காவலாளியின் செயலை, அறிவார்ந்த விசாரணை நீதிமன்றம் குறித்துக்காட்டியது. அதுபோல், புகார்தார்ர் பன்வர்லால் உடன் எ.சா.1 இருந்த்தாக தொடர்புடைய சான்றாவணத்தில் குறிப்பு இல்லாததால், பன்வர்லால் உடன் காவல்நிலையம் சென்றதாக கோரப்படும் எ.சா.1ன் சாட்சியம் நம்பத்தக்கதாக இல்லை என்று காணப்பட்டது.

13. விழுவதால் ஏற்படக்கூடிய காயங்களின் சாத்தியக்கூறு குறித்து இரண்டு எ.சாட்சிகளின் சாட்சியம் மருத்துவர் பி.என். ஸ்ரீவஸ்தவ் (அ.சா.2)இன் சான்றுடன் விவாதிக்கப்பட்டது. ஒரு உயரமான இடத்திலிருந்து விழுந்ததால்தான் காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்ற மருத்துவர் ஸ்ரீவஸ்தவின் கூற்றை அறிவார்ந்த விசாரணை நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. ஆனால் தவறி விழுந்ததன் காரணமாகத்தான் காயங்கள் ஏற்பட்டது என்று மருத்துவர் ஒருபோதும் குறிப்பிடவில்லை என்று அறிவார்ந்த நீதிபதி குறிப்பாக பதிவு செய்துள்ளார். எதிரி மாதவ்ஜி என்ற நபரை கொடூரமாக தாக்கயதால்தான் காயங்கள் ஏற்பட்டன என்பதை ஒருபோதும் எதிர் தரப்பு பரிந்துரைக்கவில்லை. அதன்படி, பொதுவான நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு முக்கிய பாகங்களின் மீதான காயங்கள் எதிரியால் ஏற்படுத்தப்பட்டது என்று முடிவு செய்யப்பட்டது.

14. இறந்தவரின் குடும்பத்தின் மீது இருந்த பழைய பகையினால் எதிரி பொய்யாக சிக்கவைக்கப்பட்டார் என்று அவர் வாதுரைத்ததால், அந்த அம்சம் குறித்து விரிவாக பரிசீலிக்கப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் கண்ணுற்ற சாட்சிகளின்

சாட்சியங்களை மதிப்பிடுகையில், பொய்யாக சிக்கவைக்கப்பட்டார் என்ற எதிரியின் வாதம் பொய்யானதாக காணப்படுகிறது. எதிரி இறந்த மாதவ்ஜிக்கு உள்நோக்கத்துடனேயே மரணம் விளைவிக்கும் காயங்களை ஏற்படுத்தினார் என்று முடிவு செய்ததன்பேரில், இ.த.ச.பிரிவு 302 உ/இ பிரிவு 149 படி அவர்களை குற்றவாளிகள் என தீர்மானித்து, ஒருவருக்கும் ரூபாய் ஆயிரம் அபராதம் விதித்ததுடன், ஆயுள்தண்டனை வழங்கியது, தவறும்பட்சத்தில் 6 மாத கால கடுஞ்சிறைத் தண்டனையையும் விதித்தது. இ.த.ச., பிரிவு 148–இன் கீழான குற்றத்திற்காக, எதிரிகளுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையுடன் ஒவ்வொருவருக்கும் ரூ.3000/–அபராதமும் விதித்தது. குற்றஞ்சாட்டப்பட்ட 7 எதிரிகளுள் லாலா விசாரணையின்போது இறந்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

15. கண்ணுற்ற சாட்சிகள் தாக்குதலை நேரில் காணவில்லை என்றாலும், அவர்கள் மாதவஜியின் கூக்குரல் கேட்டு உடனே வயல்வெளிக்கு விரைந்தனர் என்றும், எதிரிகள் கொடிய ஆயுதங்களை ஏந்தி தாக்குதல் நடந்த இடத்தில் இருந்து உடனே தப்பி ஓடினர் என்ற சாட்சியத்தை நிராகரிக்க இயலாது என்ற கருத்துரையுடன் மூன்று கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சிய மதிப்பை கேடுக்கும் மேல்முறையீட்டாளர்களின் வாதங்களை உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டில் நிராகரித்தது. கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியம் ஒத்துப்போவதை கண்டறிந்த உயர் நீதிமன்றம், எதிரிக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து கண்ணுற்ற சாட்சிகளின் கூற்று மருத்துவ சான்றுடன் உறுதியூட்டப்பட்டதையும் குறித்துக்காட்டியது. எனவே, கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனை தீர்ப்பில் எந்தவித குறைபாடும் இல்லை என தீர்மானிக்கப்பட்டு,

தண்டனை தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு அதன்படி தள்ளுபடி செய்யப்பட்டது.

16. இறந்தவரின் பிள்ளைகளான அ.சா.3 மற்றும் அ.சா.12 ஆகியோரின் சாட்சியங்கள் நிராகரிக்கப்படவேண்டும் என்ற மேல்முறையீட்டாளருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.டி.மகிப்பால் எங்கள் முன் பணிந்துரைத்தார். பழைய பகையின் காரணமாக மேல்முறையீட்டாளர்கள் பொய்யாக சிக்கவைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் பணிந்துரைத்தார். அரசுத் தரப்பு கூற்றிக்கு ஆதரவளிக்காத சில சாட்சிகளின் சாட்சியத்தையும் அவர் குறிப்பிட்டார்.

17. மறுபுறம், மத்திய பிரதேச மாநிலத்தின் துணை தலைமை வழக்குரைஞர் திருமதி.அன்கிதாசவுத்ரி, 3 கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியமும் அரசுத்தரப்பு வழக்கை உறுதிப்படுத்துவதாக வாதுரைத்தார். மருத்துவ சான்றும், காயங்களும், வாய்மொழி சாட்சியத்தை உறுதிப்படுத்துவதாக அவர் பணிந்துரைத்தார். கற்றறிந்த வழக்குரைஞர், இரு பிரிவினருக்கும் இடையே உள்ள கசப்பான உறவுமுறையே எதிரி பாதிக்கப்பட்டவரை தாக்குவதற்கான தெளிவான நோக்கத்திற்கு வழிவகுத்ததாக குறிப்பிட்டார்.

18. தொடர்புடைய சாட்சியின் சாட்சிய மதிப்பு குறித்து, நாம் தற்போது பரிசீலிக்கலாம். தலிப்சிங் மற்றும் பலர் –எதிர்– பஞ்சாப் மாநில அரசு (ஏ.ஐ.ஆர். 1953 எஸ்சி 364) என்ற வழக்கில் நீதியரசர் திரு விவியன் போஸ் இந்த அம்சம் குறி்து சரியாக கருத்துரைத்தது பின்வருமாறு :

> *"25.* இரண்டு கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியம் உறுதியூட்டப்படவேண்டும் என்ற கற்றறிந்த உயர்

நீதிமன்றத்தின் நீதியரசரின் கருத்தை நாங்கள் ஏற்கவில்லை. சாட்சிகள் பெண்கள் என்றும், அவர்களது சாட்சியத்தின் மீதே எழு ஆண்களின் தலை விதி எழுதப்பட்டுள்ளது என்ற சங்கதியே அத்தகைய கருத்துரையின் அடித்தளம் என்றால், அவ்வாறான எந்த விதியையும் நாங்கள் அறியவில்லை. அவர்கள் மரணமுற்றவருடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்ற காரணத்தை அடிப்படையாக கொண்டிருந்தால் எங்களால் அதை ஏற்க இயலவில்லை. இது பல்வேறு குற்றவியல் வழக்குகளில் பொதுவாக உள்ள தவறான வாதமாகும், அது ரமேஷ்வர் –எதிர்– ராஜஸ்தான் மாநில அரசு என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் மற்றொரு ஆயம் நீக்க முயற்சித்த. ஆயினும், நீதிமன்றங்களின் தீர்ப்புரைகளில் அது இல்லை என்றாலும், வழக்குரைஞர்களின் வாதங்களில் ஏதோ வகையில் அது நிலைத்திருப்பதை நாங்கள் காண்கிறோம். ”

26. பொதுவாக ஒரு சாட்சி கறை படிந்திருக்கக்கூடிய ஆதாரங்களிலிருந்து தோன்றாதவரை, அவர் தனிப்பட்ட சாட்சியாக கருதப்படவேண்டும். எதிரியை பொய்யாக சிக்கவைக்க விரும்பும் அளவுக்கு அவர் மீது பகையை ஏற்படுத்திக்கொள்ளாதவரை, சாதாரணமாக நெருங்கிய உறவினர் ஒருவரே உண்மையான எதிரியைத் ஆய்ந்து கடைசியாக குற்றமற்ற ஒருவரைப் பொய்யாகச் சிக்க வைப்பார் என்று பொருள்படுகிறது.....”

19. பாபுலால் (அ.சா.11) தொடர்பில்லாத சாட்சி என்பதை மேலும் குறிப்பிட வேண்டும். அவரது சான்றுரை அனைத்து பொருள் விவரங்களிலும் அ.சா.3 மற்றும் அ.சா.12 ஆகியோரின் சான்றுகளுடன்

கணிசமாக ஒத்துப்போகிறது. அவர்கள் இறந்தவருடன் தொடர்புடையவர்கள் என்பதால், குற்றமற்ற நபர்களை பொய்யாகக் சிக்கவைப்பார்கள் என்று பொருள்படாது. இச்சூழலில், உத்திரப்பிரதேச மாநிலம் –எதிர்– சம்மன்தா (1972)3 எஸ்சிசி 201, என்ற வழக்கில் நீதியரசர் திரு.எச்.ஆர்.கன்னா முறையே கருத்துரைத்ததாவது

> *23….* கொலை செய்யப்பட்ட நபரின் நெருங்கிய உறவினர்கள் உண்மையாக தாக்குதல் செய்தவரை விடுவிக்க விரும்பி, தாக்கியவருக்கு பதிலாக வேறெரு நபரை பொய்யாக சிக்கவைப்பதும் அனைவரும் அறிந்ததே…..

20. குர்ஷித் அகமது எதிர் ஜம்மு மற்றும் கேஷ்மீர் மாநிலம் (2018)7 எஸ்.சிசி 429 என்ற இந்நீதிமன்றத்தின் பிற்கால தீர்ப்பில், எங்களில் ஒருவரான நீதிபதி என்.வி.ரமணா, தொடர்புடைய சாட்சியின் ஆதாரம் தொடர்பான பிரச்சினையில் பின்வருமாறு அறிவித்த்து நியாயமானது.

> *"31.* உறவிர்களை பொய்யான சாட்சிகளாக்க் கருதவேண்டும் என்று சட்டத்தில் எந்த முன்மொழிதலும் இல்லை. மாறாக, சாட்சிகள் உண்மையான குற்றவாளியைக் காப்பாற்றுவதற்கு, எதிரியை பொய்யாக சிக்கவைத்ததற்கும் காரணம் இருப்பதைக் காட்டுவதற்கு ஒரு பாரபட்சமான வாதுரை எழுப்பபடும்போது காரணம் காட்டப்பட வேண்டும். *(*பார்க்க ஹர்பன்ஸ்கர் எதிர்.ஹரியானா மாநிலம்*)*

மேற்கூறிய முன்தீர்ப்புகள், தொடர்புடைய சாட்சியின் சாட்சியம், உண்மையெனக் கண்டறியப்பட்டால், அதுவே தண்டனைக்கு

அடிப்படையாக அமையலாம் என்பது மிகத் தெளிவாகிறது என்பதும், அ.சா.3 மற்றும் அ.சா.12 ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்தனர் என்பதும், எதிரிகள் பல கொடிய ஆயுதங்களை கையில் ஏந்தி இருந்தனர் என்பதையும் நாங்கள் நம்புவதற்கு எல்லா காரணங்களும் உள்ளன.

21. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர் காயங்கள் குறித்த எதிர்தரப்பு கூற்றை குறித்துக்காட்டி, நீரோடையில் விழுந்ததால் காயங்கள் ஏற்பட்டன என்றும், எதிரியை சிக்கவைப்பதற்கான காரணம் முன்விரோதம் என்றும் குறிப்பிட்டார். இந்த பிரச்சினை தொடர்பாக, சுசில் மற்றம் பலர் எதிர் உ.பி. மாநிலம் (1995) சப்ளி 1 எஸ்சிசி 363 என்ற வழக்கில், நீதிபதி திரு.பைசான் உதினின் கருத்துரைகளை குறிப்பிடுவதன் மூலம் நாம் பயன்பெறலாம், அதில் கற்றறிந்த நீதிபதி மிகச் சரியாக கருத்துரைத்ததாவது..

> *"8....* பகை என்பது இருமுனைகளைக் கொண்ட ஆயுதம், அது இரு வழிகளையும் வெட்டும். இது குற்றம் புரிவதற்கான உள்நோக்கத்தை கொண்டிருக்கும் அதே வேளையில், பொய்யாக சிக்கவைப்பதற்கான உட்கருத்தையும் கொண்டிருக்கும். தற்போதைய வழக்கில், உள்நோக்கத்தை நிறுவுவதற்கான சான்றுகள் உள்ளன, குற்றத்தில் எதிரி நேரடியாக ஈடுபட்டுள்ளார் என்பதை வெளிப்படுத்த அரசுத்தரப்பு நேர்மறையான ஆதாரங்களை வழங்கியிருக்கும்போது, உள்நோக்கம் முக்கியத்துவம் பெறுகிறது. அக்கறைக் கொண்ட சாட்சிகள் மற்றம் இறந்தவருடன் தொடர்புடையவர்களின் சாட்சியங்களை, அந்த காரணத்திற்காக புறந்தள்ள முடியாது. ஆனால் எச்சரிக்கை விதியைப் பயன்படுத்திய பிறகு, அவர்களின் சான்றுகள்

நம்பகத்தன்மையுடையதாக காணப்பட்டு, அது தனிப்பட்ட சாட்சியத்தின் மூலம் உறுதியூட்டப்பட்டால், அவர்களது சாட்சியத்தை நிராகரிப்பதற்கான காரணமில்லை, ஆனால் அது நம்பத்தகுந்ததாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்."

22. மற்றபடி சாட்சிகள் நம்பகமானவர்களாக இருந்தால், கடந்த கால பகை தாமே எந்த சாட்சியத்தையும், நிராகரிக்காது. உண்மையில் பகைமை இரத்த உறவுமுறை குற்றத்திற்கான தெளிவான நோக்கத்திற்கு வழிவகுக்கும். எனவே, இந்த அம்சம், தற்போதைய வழக்கில் எதிர்தரப்புக்கு உதவும் என்று நாங்கள் கருதவில்லை.

23. மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞர், சில சாட்சிகள் அரசுத் தரப்பு வழக்குக்கு ஆதரவளிக்காததால், அவர்கள் பிறழ்சாட்சிகளாக அறிவிக்கப்பட்டனர் என்று சமர்பித்தார். ஆனால் எதிரிக்கு எதிரான வழக்கை தெளிவாக ஆதரிக்க முக்கிய சான்றாதாரங்களும், நம்பகமான சாட்சியங்களும் உள்ளதால், இந்த விடையம், தொடர்பாக அரசுத் தரப்பு தோல்வியுற வேண்டியதில்லை. சில சாட்சிகள் தங்களது சொந்த காரணங்களுக்காக அரசுத் தரப்பு வாதத்திற்கு ஆதரவளிக்கவில்லை, அத்தகைய சூழ்நிலையில், மற்ற கிடைக்கக்கூடிய சான்றுகள் குற்றச்சாட்டை முழுமையாக நிரூபிக்குமா என்பதை தீர்மானிப்பது நீதிமன்றத்திற்கு அவசியமாகிறது. இந்த வழக்கில் அரசுத் தரப்புக் கூற்று நம்பகத்தன்மையுடையது என்றும், சம்பவம் குறித்து ஒரே மாதிரியான விவரங்கள் அளித்துள்ள மூன்று கண்ணுற்ற சாட்சியால் அது ஆதரிக்கப்படுகிறது என்றும் காணப்படுகிறது. அவர்களது சான்றுரை மருத்துவ சாட்சியத்தின் மூலம் உறுதியூட்டப்படுகிறது. கற்றறிந்த விசாரணை நீதிபதி இருதரப்பு சாட்சியங்களையும் விரிவாக பரிசீலித்து, நம்பிக்கையளிக்கும் ஒரு

தர்க்கரீதியான முடிவுக்கு வந்துள்ளார். எனவே, பிறழ் சாட்சிகள் மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பை பாதிக்க மாட்டார்கள் என்பது எங்களது கருத்தாகம்.

24. மேற்கூறியவற்றின் அடிப்படையிலும், கற்றறிந்த விசாரணை நீதிபதி சாட்சியங்களை ஆய்வு செய்து தீர்ப்பை வழங்கிய விதத்தை கவனத்துடன் பரிசீலித்ததன்பேரிலும், எங்களது மதிப்பீட்டின்படி, மேல்முறையீட்டளார்களின் தண்டனைத் தீர்ப்பு முறையே உத்தரவிடப்பட்டு, அது உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டது சரியே. அதன்படி அறிவிக்கப்படுகிறது.

25. அதன் விளைவாக, மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."